# மயிலாடுதுறை நகராட்சி

**2021–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் – 31 ஆம் தேதி செவ்வாய்கிழமை**
**மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டம் நடவடிக்கைகள்.**
**முன்னிலை:– திரு.க.பாலு.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **31.08.2021** | **1)** மயிலாடுதுறை நகராட்சி சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020–21 கீழ் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் செயல்முறைகள் ந.க.எண்:20557/2020/E3 நாள்:14.12.2020-ன்படி நிர்வாக அமைதி பெறப்பட்டு, 22.12.2020 அன்று தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 11.01.2021 அன்று இரண்டு சிப்பங்களாக பெறப்பட்டு, சிப்பம் 1–ற்கான பணி முடிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இப்பணிக்கான சோதனை சான்று (Test Report) மற்றும் 3–ம் நபர் ஆய்வு அறிக்கை (3rd Party inspection Report) அண்ணா பல்கலைக்கழகம் பட்டுக்கோட்டை மூலம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ.39,000/–ஐ (ரூ.9000+ரூ.30000) உடன் வழங்கிட கோரி University College of Engineering, பட்டுக்கோட்டை அவர்களது கடிதத்தில் கோரியுள்ளார்கள். எனவே பட்டியல் தொகை ரூ.39,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றத்தின் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அங்ககரிக்கலாம்.<br>**ந.க.எண்:4086/2020இ1** | **தீர்மான எண்1100**<br>**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 31.08.2021 | **2)** மயிலாடுதுறை நகராட்சியில் அனைத்து பணிகளும் தற்போது இணையதளம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. அதற்காக தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் BSNL Optical Fiber Cable இணைப்பு வேகம் இல்லாத காரணத்தினால் அடிக்கடி இணைப்பு துண்டிப்பு எற்பட்டு அலுவலக பணிகள் பாதிக்கப்படுகிறது. எனவே Rail wire Network இணைப்பு பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது அதற்கான உத்தேச செலவினம் ரூ.6000/—த்திற்க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**: அலுவலக பணிகளின் அவசர அவசியம் கருதி தமிழ் கேபிள் உலகம், (Rail wire Network Authorized ANP) No:2 ரோடு, ராஜ் டவர் 2nd Floor மயிலாடுதுறை என்ற நிறுவனத்தின் மூலம் இணைப்பு பெறுவதற்கும் மேற்கண்ட நிறுவனத்திற்க்கு ரூ.5299/— தொகை வழங்குவதற்கும் மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்:**481/2012/எப்1 | **தீர்மான எண்1101**<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 31.08.2021 | **3)** மயிலாடுதுறை நகராட்சி பொதுசுகாதாரம் டெங்கு கொசுப்புழு மற்றும் முதிர் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்வதற்கு போதிய மருந்துகள் இருப்பு இல்லாததால் தற்போது பருவமழை காலம் தொடங்கிய நிலையில் கொசு உற்பத்தி கட்டுப்படுத்தும் வகையில் தேவையான மருந்துகளை (1) டெமிபாஸ் – 100 லிட்டர், (2) பைரத்ரம் எக்ஸ்ட்ராக்ட் – 200 லிட்டர், (3) மாலத்தியான் டெக்னிக்கல் –200 லிட்டர், (4) BT powder ( Basillas Thuringes) 100 கிலோ ஆகிய மருந்துகளை வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.250000/—ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** அவர அவசியம் கருதி தற்போது பருவ மழைகள் துவங்கியுள்ளதால் கொசு ஒழிப்பு பணிகள் துவங்குவதற்க்கு தடுப்பு மருந்துகள் வாங்குவதற்க்கும் தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளுவதற்க்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:**3772/2021/எச்1 | **தீர்மான எண்1102**<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 31.08.2021 | **4)** மயிலாடுதுறை மாவட்ட நகர் புற உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக பாக மின்னனு வாக்கு பதிவு இயந்திரங்கள் (Ballot unit) 118 எண்ணிக்கைகளை 01.09.2021 அன்று ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து மயிலாடுதுறை மாவட்டத்திற்கு பாதுகாப்புடன் எடுத்து வர மயிலாடுதுறை நகராட்சி பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சித்தலைவர், மயிலாடுதுறை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்:145/2021/ஊ.வ.8 நாள்:26.08.2021.இன் படி உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே உரி வாகனத்தின் மூலம் ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து மயிலாடுதுறை நகராட்சிக்கு எடுத்து வர உத்தேச செலவினம் ரூ.40,000/—(ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்)—த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம் .<br>**ந.க.எண்** 1914/2021/எப்1 | **தீர்மான எண்1103**<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| **31.08.2021** | 5) மயிலாடுதுறை நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN 51 S 1077 என்ற எண்ணுள்ள JCB வாகனத்தை பழுது நீக்கம் செய்து இரண்டு வருடங்களுக்கு மேல் ஆனதாலும், மேலும் எதிர்வரும் காலம் மழைக்காலம் என்பதால் JCB வாகனத்தின் தேவை அதிகம் இருக்கக்கூடும் என்பதாலும் அதனை பழுது நீக்கம் செய்திட உத்தேச செலவீனம் ரூ.2,50,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s DYNATECH, Thiruvarur அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண். 3126/2021/இ1** | **தீர்மான எண்1104 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| **31.08.2021** | 6) மயிலாடுதுறை நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து திரு. ரெங்கநாதன் க/பெ கிருஷ்ணமூர்த்தி என்பவர் 08.05.2021 அன்று பணியிடை மரணமடைந்தார். அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா ரூ.2960/−அதற்குண்டான வட்டி தொகை ரூ.4809/−ஆக மொத்தம் ரூ.7769/−ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்:2829/2021/பி2 | **தீர்மான எண்1105 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 31.08.2021 | 7) மயிலாடுதுறை நகராட்சி பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விநியோகமானது இந்நகருக்கு 21கி.மீ தொலைவில் வடமேற்கு திசையில் முடிகண்டநல்லூர் என்ற இடத்தில் கொள்ளிடம் ஆற்றங்கரையில் தலைமை நீரேற்று நிலையம் அமைக்கப்பெற்றுள்ளது. நகராட்சி மூலம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து 120 குதிரை திறன் கொண்ட இரண்டு மின்மோட்டார்கள் இயக்கப்பட்டு நகரில் உள்ள வரதாச்சாரியார் பூங்கா – 1 எண்ணிக்கை, மாமரத்து மேடை – 2 எண்ணிக்கை, K.K.R நகர் - 1 எண்ணிக்கை, பாரதி நகர் பூங்கா – 1 எண்ணிக்கை ஆகிய 5 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலம் 47.50 இலட்சம் குடிநீர் நிரப்பப்பட்டும் மற்றும் சித்தர்காடு, வண்டிப்பேட்டை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு மூலம் தினசரி 7.88 மில்லியன் லிட்டர் (MLD) இந்நகர மக்களுக்கு சராசரியாக ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 92 லிட்டர் வீதம் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை சீராக Liquid Chlorination செய்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது Liquid Chlorination இருப்பு குறைவாக உள்ளதாலும், வடகிழக்கு பருவ மழைக்காலம் தொடங்கவுள்ளதாலும் பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் கருதி 2021-2022 ஆண்டுக்கு தேவையான Liquid Chlorination கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.9,90,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 3384/2021/இ1** | **தீர்மான எண்1106**<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 31.08.2021 | 8) மயிலாடுதுறை நகராட்சியில் 36 வார்டுகள் உள்ளது. இந்நகராட்சிக்கு NRCP திட்டத்தின் கீழ் 42.00 கோடி திட்ட மதிப்பீட்டில் 36 வார்டுகளில் 86.344 கி.மீ தூரத்திற்கு பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 2003 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை பணி மேற்கொள்ளப்பட்டு நிறைவுபெற்றது. 2012 ஆம் ஆண்டு முடிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. 2013 ஆம் ஆண்டு முதல் மேற்படி பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகள் நகராட்சி மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தனியார் வசம் ஒப்படைப்பு செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 8 எண்ணிக்கை கழிவுநீர் உந்து நிலையங்களில் 22 எண்ணிக்கை மின் மோட்டார்கள் மற்றும் 7 எண்ணிக்கை கழிவு நீரேற்று நிலையங்களில் 14 எண்ணிக்கை மின் மோட்டார்கள் மற்றும் மின் ஆக்கிகள் வசதிகளுடன் இயக்கப்பட்டு வருகிறது. நகராட்சிக்குட்பட்ட அனைத்து நெடுஞ்சாலைகள் நெடுஞ்சாலைத்துறையினரால் சுமார் 1 அடி முதல் 1 ½ அடி ஆழம் வரை சாலைகள் உயர்த்தப்பட்டுள்ளது. பாதாள சாக்கடை பராமரிப்பு கருதி நெடுஞ்சாலைத்துறையின் சாலையில் உள்ள அனைத்து ஆள்நுழைவு தொட்டியினை உயர்த்த வேண்டிய அவசியம் உள்ளது. அவ்வப்போது கழிவுநீர் குழாயினில் ஏற்படும் அடைப்புகளை உடனுக்குடன் நீக்க வேண்டிய அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் கீழ்கண்ட சாலையிலுள்ள manhole உயர்த்த வேண்டியுள்ளது. | **தீர்மான எண்1107**<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | திருவாரூர் மெயின் சாலை மற்றும் குறுக்கு சாலை, பூம்புகார் சாலை மற்றும் குறுக்கு சாலை, மகாதான சாலை, பெரிய கடைவீதி ஆகிய இடங்களில் manhole உயர்த்தப்பட வேண்டும். மேற்கண்ட இடங்கள் மிக முக்கியமான சாலைகள் ஆகும். எனவே மேற்கண்ட இடங்களில் manhole உயர்த்தப்பட்டால் தான் பொது மக்கள் விபத்துக்குள்ளாகாமல் இருப்பதற்கு அவ்வப்போது ஏற்படும் அடைப்பினை சரிசெய்ய முடியும் என்பதற்காகவும், தெருக்களில் கழிவுநீர் வழிந்தோடுவததை தடுக்கும் நடவடிக்கைகாகவும், இப்பணியினை உடன் செய்ய துரித நடவடிக்கை குறித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சென்னை நிபுணர் குழு கொடுத்த அறிக்கையின்படியும் பொது மக்கள் நலன் கருதியும் இப்பணியினை செய்திட ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.9,80,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 3387/2021/இ1** | |
| **31.08.2021** | 9) மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.21, சின்ன எரகலி நகராட்சி பள்ளி முகப்பு கட்டிடம் பழைமை வாய்ந்த நாட்டு ஓடு பதிந்த நகராட்சி சொந்தமான இக்கட்டிடத்தின் மேற்கூரையில் சிறு சிறு பழுதுகளாக சிமெண்ட் காரை பேயர்ந்து விழுவதும், மழைக்காலங்களில் மழைச்சாரலின் தண்ணீர் மூலம் மாணவர்கள் தவறி விழும் அபாயம் உள்ளதாலும், அதில் உள்ள ஜன்னல்கள் பேயர்ந்து விழும் நிலையிலும் உள்ளதாலும், அப்பள்ளிக்கட்டிடத்தை பயன்படுத்த முடியாத நிலை உள்ளது.மேலும் அப்பள்ளியின் தலைமை ஆசிரியை அவர்கள் கடிதம் மூலம் பள்ளி கட்டிடத்தை சரிசெய்து தருமாறு கேட்டுக் கொண்டதால் அக்கட்டிடத்தை நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்கள் ஆய்வு செய்து உடனடியாக அப்பள்ளிக்கட்டிடத்தை சீர் செய்து தருமாறு கூறியதையடுத்து அப்பள்ளியில் உள்ள சிமெண்ட் ஜன்னல்களை நீக்கி, இரும்பு கிரில் அமைக்கவும், பழுதடைந்த நாட்டு ஓடுகளை மாற்றிடவும், பழைமையினை உயிருட்டும் வகையில் (ஓட்டிற்கு கீழ் சிமெண்ட் சீட் அமைத்தும் அதன் மேல் ஓடுகள் பதிக்கவும்) கட்டிடத்தில் தேவையான இடங்களில் பூச்சு வேலைகள் செய்திடவும், பழுதடைந்த மரக்கதவுகளை மாற்றிடவும், கட்டிடத்திற்கு வண்ணம் பூசவும் ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.5,20,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி கல்வி நிதியிலிருந்து பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 3386/2021/இ1** | **தீர்மான எண்1108**<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| **31.08.2021** | 10) மயிலாடுதுறை நகராட்சியில் 36 வார்டுகள் உள்ளது. இந்நகராட்சிக்கு NRCP திட்டத்தின் கீழ் 42.00 கோடி திட்ட மதிப்பீட்டில் 36 வார்டுகளில் 86.344 கி.மீ தூரத்திற்கு பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 2003 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை பணி மேற்கொள்ளப்பட்டு நிறைவுபெற்றது. 2012 ஆம் ஆண்டு முடிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. 2013 ஆம் ஆண்டு முதல் மேற்படி பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகள் நகராட்சி மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தனியார் வசம் ஒப்படைப்பு செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 8 எண்ணிக்கை கழிவுநீர் உந்து நிலையங்களில் 22 எண்ணிக்கை மின் மோட்டார்கள் மற்றும் 7 எண்ணிக்கை கழிவு நீரேற்று நிலையங்களில் 14 எண்ணிக்கை மின் மோட்டார்கள் மற்றும் மின் ஆக்கிகள் வசதிகளுடன் இயக்கப்பட்டு வருகிறது. இதில் PS.4 இருந்து PS.8-ற்கு செல்லும் குழாய்கள் சுமார் 2.26 கி.மீ தரங்கம்பாடி நெடுஞ்சாலையாகும். இதில் சில பகுதிகளில் உள்ள குழாய்களில் அடிக்கடி வெடிப்பு ஏற்பட்டு கழிவுநீர் வெளியே சென்றதையடுத்து அதனை சரி செய்து குழாய்களை மாற்றியமைத்து சீர் செய்யப்பட்ட நிலையில் குழாய்கள் பழுது பார்த்த பகுதிகளில் பள்ளங்கள் ஏற்பட்டு வாகனங்கள் செல்ல இயலாமலும், இரு சக்கர வாகனங்களில் செல்லும் மக்களுக்கு மிக கடினமாக உள்ள நிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மயிலாடுதுறை அவர்களிடமிருந்து தொலைபேசி வழியாக சாலையை சீரமைக்க கோரி கூறியதாலும் அச்சாலையில் உள்ள பள்ளங்களை சரிசெய்யவும், மற்ற நெடுஞ்சாலைகளில் அவ்வப்போது ஏற்படும் குழாய் உடைப்புகளை சரி செய்து பள்ளங்களில் Wet mix பரப்பு, தார் பேட்ச் போட ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.9,90,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 3385/2021/இ1** | **தீர்மான எண்1109**<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| **31.08.2021** | 11) மயிலாடுதுறை நகராட்சி – குடிநீர்- ஜல் ஜீவன் மிஷன் '2021' – படிவங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்ப நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள குளங்களில் உள்ள நீரை பரிசோதனை செய்து அதன் பரிசோதனை அறிக்கை பெற்று விபரங்கள் தரவேண்டியது. நகராட்சியில் 83 எண்ணிக்கைக்கு மேல் குளம்/குட்டை உள்ளதாக வருவாய் துறை ஆவணங்களில் உள்ளது. ஆவணங்களில் உள்ள குளம்/குட்டையில் உள்ள நீரினை திருச்சியில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பரிசோதனை கூட்டத்தில் மேற்கொள்ள ஒரு தண்ணீர் மாதிரிக்கு ரூ.3,540/- வீதம் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. இதன்படி இப்பணிக்கான மொத்த உத்தேச மதிப்பு ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 3410/2021/இ1** | **தீர்மான எண்1110**<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>31.08.2021</td>
<td>12) இந்நகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு குத்தகை இனங்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 23.02.2021 அன்று வைக்கப்பட்டதில் ஏலம் போகாதா கீழ்கண்ட இனங்கள் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே தேவையான ரசீது புத்தங்கள் அவசர அசியம் கருதி உனடியாக கூட்டுறவு நிறுவனமாக மயிலாடுதுறை மாவட்ட பிரிண்டிங் சர்வீஸ் ஐசிஎஸ் நிறுவனத்திடமிருந்து நேரடியாக அச்சடித்து வாங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>இனம்</th><th>தேவைப்படும் ரசீது புத்தங்கள் எண்ணிக்கை</th></tr>
<tr><td>1.</td><td>கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் சிறுநீர் கழிப்பதற்கு கட்டணம் ரூ.2/-</td><td>1200 புத்தகங்கள்<br>(30,001 – 1,50,000)<br>எண்ணிக்கை</td></tr>
<tr><td>5.</td><td>கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மல கழிப்பறை கட்டணம் ரூ.3/-</td><td>1200 புத்தகங்கள்<br>(30,001 – 1,50,000)<br>எண்ணிக்கை</td></tr>
<tr><td>6.</td><td>கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் குளியல் அறை பயன்படுத்தும் கட்டணம் ரூ.5/-</td><td>150 புத்தகங்கள்<br>(5001 – 20,000) எண்ணிக்கை</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.1398/2021/அ2</td>
<td>தீர்மான எண்1111<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>31.08.2021</td>
<td>13) மயிலாடுதுறை நகராட்சி பொதுசுகாதாரம் கொரோனா வைரஸ் நோய் கிருமி பரவுவதை தடுக்கும் நோக்கத்தில் நகராட்சியில் கிருமி நாசினிகள் போதிய அளவில் கையிருப்பு இல்லாததால் அவற்றினை வாங்கிட ஏதுவாக நீர்த்த சுண்ணாம்பு 20000 கிலோ ,பிளிச்சிங் பவுடர் 3000 கிலோ வாங்கவும் அதற்குள்ளான உத்தேச செலவினத்தொகை ரூ.200000/–(இரண்டு லட்சம் மட்டும்) த்திற்கு மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்:1302/201/எச்1</td>
<td>தீர்மான எண்1112<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 31.08.2021 | 14) மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்ட பராமரிப்பு பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் 2019-2020ம் நிதியாண்டில் குடிநீர் பராமரிப்பு பணிக்கு மாவட்ட ஆட்சியரின் விலைவிகிதத்தில் பணியாளர்கள் வழங்கும் பணிக்கு 14.02.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அதில் குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள திரு.க.செந்தில் என்பவருக்கு 28.02.2020ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு மேற்படி பணியாளர்களால் பணி பார்க்கப்பட்டு வந்த நிலையில் 28.02.2021ம் மாதத்துடன் மேற்படி ஒப்பந்ததாரரின் பணிக்காலம் முடிவடைந்துவிட்டது.<br>அக்காலக்கட்டத்தில் 2021 சட்டமன்ற பொது தேர்தல் நடத்தை விதி முறைகள் அமலில் இருந்ததால் ஒப்பந்தபுள்ளி கோர இயலவில்லை எனவும் அதே விலைவிகிதத்தில் மேற்படி ஒப்பந்ததாரருக்கு பணி நீட்டிப்பு வழங்க கு.கோ.எண்.222/2020/இ1, பக்கம் எண்.11ல் உதவி பொறியாளரால் குறிப்பு வழங்கப்பெற்று ஆணையரால் ஒப்புதல் வழங்கப்பட்டதின் அடிப்படையிலும், இந்நகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவது இன்றியமையாத ஒன்று என்பதாலும் மார்ச் 2021ம் மாதம் முதல் ஜுன் 2021ம் மாத முடிய அதே ஒப்பந்தகாரரால் அதே விலைவிகிதத்தில் பணி மேற்கொண்டமைக்கும் இதற்கான செவீன தொகை ரூ.1,84,420/-ஐ குடிநீர் திட்ட கணக்கில் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.<br>அலுவலககுறிப்பு: மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 00222/2020/இ1 | தீர்மான எண்1113<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 31.08.2021 | 15) 75வது சுதந்திர தின விழாவினை முன்னிட்டு 1) நகராட்சி வளாகம், வரதாச்சாரியார் பூங்கா, நம்பர்.2 ரோடு ஆகிய மூன்று இடங்களில் உள்ள காந்தி சிலைக்கு வண்ணம் பூசுதல் 2) வரதாச்சாரியார் பூங்கா, நம்பர்.2 ரோடு ஆகிய மூன்று இடங்களில் உள்ள காந்தி சிலைக்கு அலங்கார விளக்குகள் பொருத்துதல் (2 நாள் வாடகைக்கு) 3) 100 எண்ணிக்கை நாற்காலிகள் ஒரு நாள் வாடகைக்கு வாங்குதல் 4) நகராட்சி அலுவலகத்தில் கல்வெட்டு பதித்தல் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.60,000/-(ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) ஆகும், இதனை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து நகராட்சிகளின் சட்டவிதி எண்.15ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி எண்.15ன் கீழ் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Thiru.G.ELANCHEZHIYAN, Mayiladuthurai அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 3123/2021/இ1 | தீர்மான எண்1114<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 31.08.2021 | 16) மயிலாடுதுறை நகராட்சியில் (Day-NULM) திட்டம் 2020-2021ன்கீழ் அரசு பெரியார் மருத்துவமனை வளாகத்தில் ரூ.72.00 இலட்சம் மதிப்பீட்டில் நோயாளிகளுடன் வரும் நபர்கள் தங்கும் கட்டிடம் கட்ட மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரியதை இரண்டு தினசரிகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மாநில அளவில் பிரசூரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.53,340/-ஐ வழங்கக் கோரி Vipras Ads- Chennai நிறுவனம் பட்டியல் வழங்கியுள்ளது. மேற்படி செலவீனத் தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** 1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை மாநில அளவில் இரு தினசரிகளில் விளம்பரம் செய்யப்பட்டதை ஏற்கலாம்.<br><br>**ந.க.எண். 0531/2020/இ1** | **தீர்மான எண்1115**<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 31.08.2021 | 17) மயிலாடுதுறை நகராட்சியின் 2019–2020 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.125523/– செலுத்தப்படமால் நிலுவையாக உள்ளதாகவும் அதனை செலுத்திட தெரிவித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்:2303/2021/அ3 நாள்:06.08.2021 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மயிலாடுதுறை நகராட்சியின் 2019 –2020 தணிக்கை அறிக்கை பத்தி எண்–91 ல் மேற்கண்ட தணிக்கை கட்டணம் ரூ.125523/–யினை உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**ந.க.எண்:**9643/2015/பி4 | **தீர்மான எண்1116**<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 31.08.2021 | 18) இந்நகராட்சியில் 2021–2022 ஆம் நிதியாண்டிற்கு அலுவலகத்தில் உள்ள கணினி பிரிவிற்கு உபயோகத்திற்கு தேவையான டோனர்கள், கணினி உதிரிபொருட்கள் வாங்க உத்தேச செலவினம் ரூ.20,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>**ந.க.எண்:1668/2020டி2** | **தீர்மான எண்1117**<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 31.08.2021 | 19) இந்நகராட்சியில் 2021–2022 ஆம் நிதியாண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள் ,மற்றும் எழுது பொருட்கள் வாங்க உத்தேச செலவினம் ரூ.20,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண்: 1656/2020/டி2** | **தீர்மான எண்1118**<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| **31.08.2021** | **20)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்வதற்கு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏப்டுத்தும் வகையில் முகாம்கள், கொரோனா பாதிப்பு அடைந்த வீடுகளுக்கு நோட்டீஸ் மூலம் அடையாளம் படுத்தியவர்களை ICMR Test படிங்களில் பூர்த்தி செய்திடுவதற்காக படிவங்கள் நகராட்சி பகுதிகளில் நடைபெறும் தடுப்பு ஊசி முகாம்களுக்கான ஒப்புகை சீட்டுகள் மற்றும் மாவட்ட ஆட்சியர் மயிலாடுதுறை, சட்டமன்ற உறுப்பினர் ஆலோசனை கூட்டங்கள் மேற்கொள்வதற்கும் அரசு கூட்டுறவுத் துறையை சேர்ந்த மயிலாடுதுறை மாவட்ட பிரிண்டிங் கோ ஆப்டிக்ஸ் பிரஸ் என்ற கூட்டுறவுத் துறையிலிருந்து வேலை உத்தரவு வழங்கிடவும் IEC – திட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், அதற்கானஉத்தேச செலவுத்தொகை ரூ.100000/- கொரோன நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அவசர அவசியம் கருதி கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920-பிரிவு 15-ன்கீழ் வழங்கிடவும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** நகராட்சி பகுதிகளில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிருப்பதால் மயிலாடுதுறை மாவட்ட கூட்டுறவு பிரிண்டிங் பிரஸ் நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்வதை மன்றும் அங்கீகரிக்கலாம்.<br><br>**ந.க.எண்.1302/2020/எச்1** | **தீர்மான எண்1119 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| **31.08.2021** | **21)** மயிலாடுதுறை சட்டமன்றத்தேர்தல் 2021 முன்னிட்டு அனைத்து வாக்குச்சாவடி மையங்களுக்கு கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு, குப்பை கூடைகள்ள் அட்டை பெட்டிகள், டேபுல்கள் மற்றும் பிளாஸ்டிக் பைகள் (Dust Bib, Box, Tape, Yellow Cover) வழங்கிய வகையில் மேற்கொள்ளப்பட்ட செலவின தொகையான மயிலாடுதுறை நகராட்சிக்கு ரூ.119480/-வரைவோலையாக நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயலாணைகள் கடிதம் செ.மு.க.எண்.1481/2021/சி1, நாள்:09.06.2021ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>மேற்படி சட்டமன்றத்தேர்தல 2021ல் வாக்குசாவடி மையங்குக்கான குப்பை கூடைகள், அட்டை பெட்டிகள் மற்றும் பிளாஸ்டிக் பைகள் (Dust Bib, Box, Tape, Yellow Cover)-களை விநியோகம் செய்ய மயிலாடுதுறை மாவட்ட மயிலாடுதுறை மாவட்ட பிரிண்டிங், சர்வீஸ் ICS லிமிட்.,<br>35/16, பிள்ளையார் கோவில் மேற்கு தெரு, கணபதி நகர், கூறைநாடு, மயிலாடுதுறை ,விநியோகம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்து ஒப்புதல் செய்து அங்கீகரிக்கலாம்.<br><br>**ந.க.எண்.1302/2020/எச்1** | **தீர்மான எண்1120 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

# மயிலாடுதுறை நகராட்சி

**2021–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் – 12 ஆம் தேதி வியாழக்கிழமை**
**மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை:– திரு.க.பாலு.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **12.08.2021** | 1) இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN.51.T.7645 என்ற எண்ணுள்ள ஈப்பு வாகனத்தின் வாட்டர் பம்ப், பேரிங் உடைந்துள்ளது. எனவே புதியதாக வாட்டர் பம்ப்செட் மற்றும் பேரிங் செட் ஹோஸ் புதியதாக மாற்ற வேண்டும் அதற்கான உத்தேச செலவீனத் தொகை ரூ.16,500/- (ரூபாய் பதினாறாயிரத்து ஐந்நூறு மட்டும்). இதனை குடிநீர் திட்ட நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2591/2021/இ1 | **தீர்மான எண் 1090**<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td rowspan="6">12.08.2021</td><td colspan="6">2) இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 05.07.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.</td><td rowspan="6">தீர்மான எண் 1091<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>விலைப்புள்ளி மதிப்பு ரூ.</th><th>விலைப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனத்தாரர்கள் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம்</th><th>குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர் பெயர் திருவாளர்கள்</th></tr>
<tr><th>1</th><th>2</th><th>3</th><th>4</th><th>5</th><th>6</th></tr>
<tr><td colspan="6">குடிநீர் திட்ட நிதி</td></tr>
<tr><td>1.</td><td>மயிலாடுதுறை நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN-51-T-7645 என்ற எண்ணுள்ள ஈப்பு வாகனத்தின் வாட்டர் பம்ப், பேரிங் மற்றும் ஹோஸ் பைப் பழுதடைந்துள்ளதை மாற்றி சீர் செய்யும் பணி.</td><td>16,500/-</td><td>M/S ELANGO AUTOMOBILES, THIRUVARUR ROAD, MAYILADUTHURAI.<br><br>M/S VANI AUTO WORKS, NO.1 ROAD, MAYILADUTHURAI.<br><br>M/S AMMARA AUTO WORKS, T.V.R. ROAD, MAYILADUTHURAI.</td><td>ரூ. 16200/– மதிப்பீட்டை விட குறைவு<br><br>ரூ. 16500/– மதிப்பீட்டு அளவு<br><br>ரூ. 17500/– மதிப்பீட்டை விட அதிகம்</td><td>M/S ELANGO AUTOMOBILES, Thiruvarur road, Mayiladuthurai.</td></tr>
<tr><td colspan="6">அலுவலககுறிப்பு : 1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள விலைப்புள்ளியினை ஏற்கலாம்.<br>2.மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின்முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண். 2591/2021/இ1</td></tr>
</table>

<table>
<tr><td rowspan="6">12.08.2021</td><td colspan="6">3) மயிலாடுதுறை நகராட்சி 15வது மத்திய நிதி குழு நிதி 2020-2021ன் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 25.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.</td><td rowspan="6">தீர்மான எண் 1092<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>வ எ ண்</td><td>வேலையின் விபரம்</td><td>ஒப்பந்த மதிப்பு ரூ.</td><td>ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனத்தாரர்கள் பெயர்</td><td>மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம்</td><td>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர் பெயர்</td></tr>
<tr><td colspan="6">15வது மத்திய நிதி குழு நிதி 2020-2021</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட Jet Rodding Machine 1 எண்ணிக்கை வாகனம் வாங்கும் பணி</td><td rowspan="2">54,30,000/-</td><td>VAMBSK FABS (P) LTD., Coimbatore - 641 025.</td><td>ரூ.5124500.00<br>(-) 5.63% குறைவு</td><td rowspan="2">VAMBSK FABS (P) LTD., Coimbatore - 641 025.</td></tr>
<tr><td>M/s WHALE ENTERPRISE PRIVATE LIMITED, Coimbatore.</td><td>ரூ.5641770.00<br>(+) 3.90% அதிகம்</td></tr>
<tr><td colspan="6">அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.<br><br>ந.க.எண். 0047/2020/இ1</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| **12.08.2021** | 4) மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்ட நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 06.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண் 1093** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| **வ எண்** | **வேலையின் விபரம்** | **ஒப்பந்த மதிப்பு ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனத்தாரர்கள் பெயர்** | **மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர் பெயர்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| குடிநீர் திட்ட நிதி | | | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் பராமரிப்பு பணிக்கு மாவட்ட ஆட்சியரின் ஊதிய விகிதத்தில் 8 பணியாளர்களை அமர்த்தி கொள்ளும் பணி. (ஜூலை 2021 முதல் டிசம்பர் 2021 வரை) | 7,10,000/- | திரு. A.சட்டையப்பன், மயிலாடுதுறை | மதிப்பீட்டு அளவு | திரு. A.சட்டையப்பன் , மயிலாடுதுறை |
| | | | திரு. S.வீராசாமி, மயிலாடுதுறை. | ரூ.612000.00 (+)1.19% அதிகம் | |

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்.** 2465/2021/இ1

| | | |
|---|---|---|
| **12.08.2021** | 5) மயிலாடுதுறை நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 08.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண் 1094**<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| **வ எண்** | **வேலையின் விபரம்** | **ஒப்பந்த மதிப்பு ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனத்தாரார்கள் பெயர்** | **மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம்** | **குறைந்த ஒப்பந்தப் புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரார் பெயர்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| பொது நிதி | | | | | |
| 1 | மயிலாடுதுறை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தின் பொது கழிப்பறையினை பராமரிப்பு செய்து பழுது நீக்கம் செய்யும் பணி. | 3,50,000 /- | திரு. S.வீராசாமி, மயிலாடுதுறை. | **ரூ.292472.03**<br>(-) 0.12%<br>குறைவு | திரு. S.வீராசாமி, மயிலாடுதுறை. |
| | | | திரு. A.சட்டையப்பன், மயிலாடுதுறை. | **ரூ.293745.02**<br>(+)0.31%<br>அதிகம் | |
| 2 | மயிலாடுதுறை நகராட்சிஅவையாம்பாள்புரம் பொது கழிப்பறையினை பராமரிப்பு செய்து பழுது நீக்கம் செய்யும் பணி. | 1,50,000 /- | திரு. S.வீராசாமி, மயிலாடுதுறை. | **ரூ.144589.05**<br>(-) 0.14%<br>குறைவு | திரு. S.வீராசாமி, மயிலாடுதுறை. |
| | | | திரு. A.சட்டையப்பன், மயிலாடுதுறை. | **ரூ.145541.03**<br>(+) 0.52%<br>அதிகம் | |
| 3 | மயிலாடுதுறை நகராட்சி கிட்டப்பா அங்காடி கட்டண கழிப்பறையினை பராமரிப்பு செய்து பழுது நீக்கம் செய்யும் பணி. | 2,00,000 /- | திரு. S.வீராசாமி, மயிலாடுதுறை. | **ரூ.170481.55**<br>(-) 0.04%<br>குறைவு | திரு. S.வீராசாமி, மயிலாடுதுறை. |
| | | | திரு. A.சட்டையப்பன், மயிலாடுதுறை. | **ரூ.171254.54**<br>(+) 0.41%<br>அதிகம் | |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td rowspan="2">4</td><td rowspan="2">மயிலாடுதுறை நகராட்சி காமராஜர் பேருந்து நிலையத்தினை பராமரிப்பு செய்து பழுது நீக்கம் செய்யும் பணி.</td><td rowspan="2">6,30,000 /-</td><td>திரு. S.வீராசாமி, மயிலாடுதுறை.</td><td>ரூ.547441.22 (-) 0.04% குறைவு</td><td rowspan="2">திரு. S.வீராசாமி, மயிலாடுதுறை.</td></tr>
<tr><td>திரு. A.சட்டையப்பன், மயிலாடுதுறை.</td><td>ரூ.549542.23 (+) 0.34% அதிகம்</td></tr>
</table>
அலுவலககுறிப்பு:<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.<br>
3. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி வரிசை எண்4–ல் கண்டுள்ள பணிக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கிகரிக்கலாம்<br>
ந.க.எண். 0861/2021/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>12.08.2021</td>
<td>6) மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான யாத்திரா நிவாஸ் கட்டிடத்தினை மயிலாடுதுறை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கடித எண்.6856/அ1/2020 நாள்.02.07.2021 என்ற கடிதத்தின்படி வாடகைக்கு கோரப்பட்டது. அதுதொடர்பாக இடம் ஆய்வு செய்யப்பட்டது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலர்கள் நேரில் வந்து அலுமினியம் ஜன்னல் மற்றும் கழிப்பிட கதவுகள் மாற்றி தருமாறும் கட்டிட முகப்பில் வர்ணம் பூசி தருமாறும் கோரியுள்ளனர். மேலும் இப்பழுது நீக்க பணியினை செய்ய உத்தேச செலவீனம் ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்). இதனை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
ந.க.எண். 2481/2021/இ1</td>
<td>தீர்மான எண் 1095<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 12.08.2021 | 7) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாகப்பட்டினம் மயிலாதுறை அவர்களின் கடிதம் ந.க.எண்.529/2020/நாமா2. நாள்.23.02.2021.–ன்படி வார்டு.4, பிளாக்.16, நகரளவு எண்கள். 759/1, 759/5–ல் 62335.40 சதுரடி இடத்தில் அமையும் மனைப்பிரிவில் உள்ள சாலை, பொது உபயோக இடத்தினை தானபத்திரம் மூலம் (ஆவண எண். 345/2021) மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு மனுதாரர்கள் 1. திருமதி. ரா.அனிதா (ம) ப.ராமநாதன் 2.திரு.அ.சரவணன் என்பவர்களல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது எனவே மேற்படி சாலை 14121.33 சதுரடி, பொது உபயேகம் 248 மற்றும் தமிழ் நாடு மின்சார வாரியத்திற்கு 248 சதுரடி இடத்தினை நகராட்சி ஆணையர் பெயரில் பட்டா மாற்றம் செய்து கொடுக்க மயிலாடுதுறை நிலவரித்திட்டம் நத்தம் தனிவட்டாட்சியருக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட தானபத்திர ஆவணம், மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2.மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்,<br><br>**ந.க.எண்.842 / 2021/எப்1.** | **தீர்மான எண் 1096**<br>**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| 12.08.2021 | 8) இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN 51 K 5337 என்ற குடிநீர் லாரியின் குடிநீர் வழங்கும் குழாயில் பழுது எற்பட்டு குடிநீத் வீணாவதால் புதியதாக 11 மீட்டர் PVC குழாய் வாங்குவதற்கு உத்தேச செலவீனம் ரூ.8,300/–(ரூபாய் எட்டாயிரத்து மூந்நூறு மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து நகராட்சிகளின் சட்ட விதி எண்:15–ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்பகிறது.<br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2 . மேற்படி பணியியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள அம்மன் மோட்டார் பைப்ஸ், மயிலாடுதுறை அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>**ந.க.எண்:1177/2021/இ1** | **தீர்மான எண் 1097**<br>**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 12.08.2021 | 9) மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் அரசு மருத்துவமனை இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் சுமார் 400 படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகள் தங்கி மருத்துவம் பெற்று வருகிறார்கள். மேற்கண்ட உள்நோயாளிகளுடன் உடன் வரும் உதவியாளர்கள் தங்குவதற்கு வசதியாக சிறப்பு கட்டிடம் கட்டுவதற்கு (Special Shelter) NULM–2020–21 திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் கடித ந.க.எண்:38038/2013/UPA2–1, நாள்:25.02.2021 ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.<br>அதன்படி மயிலாடுதுறை பெரியார் அரசு மருத்துவமனையில் நோயாளிகளுடன் வரும் உதவியாளர் சுமார் 50 நபர்கள் தங்குமிடம் கட்டுவதற்கு ரூ.72.00 இலட்சம் மதிப்பீடு (ரூபாய் எழுபத்தி இரண்டு இலட்சம்) ஆகும். மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட திட்டத்திற்கான தொழில்நுட்ப அனுமதி பெற உரிய திட்ட பிரேரணைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.<br>**ந.க.எண்:0531/2020/இ1** | **தீர்மான எண் 1098 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| 12.08.2021 | 10) மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் திரு. ஆர். மோகன், ஒட்டுனர் அரசாணை எண் (நிலை ) 238, ந.நி(ம) .வ (மா.ந4) துறை, நாள்:01.10.1997–ல் தெரிவித்துள்ளபடி வாகன ஒட்டுநர்கள் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணியாற்றி முடித்தவர்களுக்கு தங்கப்பதக்கம் அளிக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன் பெயரில் திரு.ஆர். மோகன், ஒட்டுனர் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரிந்துள்ளதற்கு தங்கப்பதக்கம் வழங்குவதற்க்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, அவர்களின் கடிதம் ந.க.எண்:24817/ஜே3/2020,நாள்:13.07.2021–ல் பரிந்துரை செய்து பதக்கத்தினை பூம்புகார் நிறுவனத்தில் The Tamilnadu Hndicrafts Development Corporation Ltd.,Chennai அவர்களிடமிருந்து பெற்றுகொள்ளவும், அதற்கான செலவினத்தொகை சம்மந்தப்பட்ட நகராட்சிகள் செலுத்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>ஏனவே, மேற்படி நகராட்சி ஒட்டுனருக்கு தங்கப்பதக்கம் பெற்றிடுவதற்கான அரசுத்துறை நிவனமான பூம்புகார் நிறுவனத்தின் The Tamilnadu Hndicrafts Development Corporation Ltd.,Chennai , அவர்களுக்கு செலவினத்தொகை ரூ.25500/–ஐ வழங்கிடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** 1. அனுமதிக்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி பதக்கத்தினை உடனடியாக பெறவேண்டிருப்பதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு தொகை வழங்குவதை மன்ற அங்கீகரிக்கலாம்.<br><br>**ந.க.எண்:112/2021எச்1** | **தீர்மான எண் 1099 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |